

2021-ஆம்
ஆண்டு
முதல்



# தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வு மதிப்பெண் அளவைமுறை, உயர்நிலை 1-க்கான



## நுழைவுச் சேர்க்கை ஆகியவற்றைப் பற்றிய தகவல்களை அறிந்துகொள்ள ஒரு சுருக்கு வழிகாட்டி

இவ்வாண்டு உங்கள் பிள்ளை தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வுக்குத் தயார் செய்துகொண்டிருக்கிறாரா? தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வு பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய 6 செய்திகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

# 2021-ஆம் ஆண்டு முதல், தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வு டி – ஸ்கோர், அடைவுநிலைகள் என்று அழைக்கப்படும் பரவலான தர அளவைமுறைக்கு மாற்றப்படும்.

## 1 டி – ஸ்கோர்க்குப் பதிலாக அடைவுநிலைகள்

ஒவ்வொரு தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வுப் பாடமும் **8 அடைவுநிலைகளின் (ALs)** அடிப்படையில் மதிப்பிடப்படும். இதில் அடைவுநிலை 1 உச்ச அடைவுநிலையைக் குறிக்கும். ஒரு குறிப்பிட்ட பாடத்தில் உங்கள் பிள்ளை பெறும் அடைவுநிலை அவரது தனிப்பட்ட செயல்திறனை மட்டுமே பிரதிபலிக்கும். அவரின் செயல்திறன் சக மாணவர்களின் செயல்திறனோடு ஒப்பிடப்படமாட்டாது.

புதிய அளவை முறையைப்பற்றி நன்கு அறிந்துகொள்ள உதவும் வகையில் தொடக்கநிலை ஐந்து முதல் உங்கள் பிள்ளை, அடைவுநிலை அடிப்படையில் அமைந்த பள்ளி சார் தேர்வு முடிவுகளைப் பெறுவார்.

| அடைவுநிலை AL | மதிப்பெண்களின் பரப்பெல்லை |
|---|---|
| 1 | ≥90 |
| 2 | 85-89 |
| 3 | 80-84 |
| 4 | 75-79 |
| 5 | 65-74 |
| 6 | 45-64 |
| 7 | 20-44 |
| 8 | <20 |

## 2 அடிப்படை நிலைப் பாடங்களுக்கான மதிப்பீடு

உங்கள் பிள்ளை அடிப்படைநிலைப் பாடங்களைப் படித்துக்கொண்டிருந்தால், அந்தப் பாடத்திற்கு ஏ முதல் சி வரையிலான அடைவுநிலை வழங்கப்படும்.

உயர்நிலை 1-க்கான நுழைவுச் சேர்க்கையின் பொருட்டு, எடுத்துக்காட்டில் உள்ளதுபோல அடைவுநிலை ஏ முதல் அடைவுநிலை சி வரை ஒரு மாணவரின் அடைவுநிலைகள் பொதுநிலைப் பாடங்களுக்கான அடைவுநிலைகளுடன் பொருத்திப்பார்க்கப்பட்டபின் தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வுக்குரிய ஒட்டுமொத்த மதிப்பெண் பெறப்படும்.

| அடிப்படைநிலைப் பாடங்களுக்கான தரம் | அடிப்படைநிலைப் பாடங்களுக்குரிய மதிப்பெண்களின் பரப்பெல்லை | பொதுநிலைப் பாடங்களுடன் சம மதிப்புள்ள அடைவுநிலை |
|---|---|---|
| A | 75-100 | 6 |
| B | 30-74 | 7 |
| C | <30 | 8 |

பாடங்களின் கற்றல், மதிப்பீடு ஆகியவற்றின் சுமையை அடிப்படையாகக்கொண்டே அடைவுநிலைகள் பொருத்திப்பார்க்கப்படும். இதன்மூலம் உயர்நிலைப் பாடக்கலைத்திட்டத்துக்கு மாணவர்கள் தயாராக இருக்கிறார்களா என்பதை அவர்கள் அறிந்துகொள்ள முடியும்.

## ③ தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வு மதிப்பெண்களைக் கணக்கிடுதலும் பாடப்பிரிவு இடவமர்வும்

உங்கள் பிள்ளையின் தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வு மதிப்பெண் அவரது பொதுநிலை, அடிப்படைநிலைப் பாடங்கள் நான்குக்கும் வழங்கப்பட்ட அடைவுநிலைகளின் கூட்டு எண்ணிக்கையாக இருக்கும். தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வு மதிப்பெண்களின் பரப்பெல்லை **4 முதல் 32** வரை உள்ளது. இதில் 4 என்பது ஒரு மாணவர் பெறக்கூடிய மிகச் சிறந்த மொத்த மதிப்பெண்ணாகும்.

உங்கள் பிள்ளை அவரது தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வு மதிப்பெண்ணின் அடிப்படையில் விரைவுநிலை அல்லது வழக்கநிலை (ஏட்டுக்கல்வி) அல்லது வழக்கநிலை (தொழில்நுட்பம்) ஆகிய பாடப்பிரிவில் சேர்க்கப்படுவார். அவர் எந்தப் பாடப்பிரிவில் சேர்க்கப்படுகிறாரோ அந்தப் பாடப்பிரிவுக்குரிய உயர்நிலைப் பள்ளிப் பாடங்கள் அனைத்தையும் பயில முடியும்.*

| உயர்நிலைப் பாடப்பிரிவு | அடைவுநிலைகளின் கூட்டு எண்ணிக்கை |
|---|---|
| Express விரைவு | 4-20 |
| Express/N(A) Option<br>விரைவு/வழக்கம்(ஏட்டுக்கல்வி)<br>(தெரிவு) | 21-22 |
| N(A)<br>வழக்கம்(ஏட்டுக்கல்வி) | 23-24 |
| N(A)/N(T) Option<br>வழக்கம் (ஏட்டுக்கல்வி)/வழக்கம்<br>(தொழில்நுட்பம்) (தெரிவு) | 25 |
| N(T)<br>வழக்கம் (தொழில்நுட்பம்) | 26-30<br>ஆங்கில மொழியிலும் கணிதத்திலும் அடைவுநிலை 7 அல்லது அதைவிடச் சிறந்த அடைவுநிலை |

* வழக்கம் (தொழில்நுட்பம்) பாடப்பிரிவுக்குச் செல்லும் மாணவர்கள் ஆங்கில மொழியிலும் கணிதத்திலும் குறைந்தபட்சம் அடைவுநிலை 7-ஆவது பெற வேண்டும். இந்த அளவுகோல் மற்ற அனைத்து உயர்நிலைப் பிரிவுகளுக்கும் பொருந்தாது.



## 4 உயர்நிலைப் பள்ளியில் பாட அடிப்படையிலான வகைப்பாட்டுக்குத் தகுதிபெறுதல்

உயர்நிலைப் பள்ளியில் பாட அடிப்படையிலான வகைப்பாடு (எஸ். பி. பி) என்பது குறிப்பிட்ட பாடத்தில் மாணவர்களுக்குள்ள ஆற்றலை அடையாளங்காண்பதோடு அவர்களின் முழுத் திறனை அடைவதற்குரிய வாய்ப்புகளையும் வழங்குகிறது.

பாட அடிப்படையிலான வகைப்பாடு, வழக்கநிலை(ஏட்டுக்கல்வி), வழக்கநிலை (தொழில்நுட்பம்) பயிலத் தகுதி பெறும் மாணவர்கள் உயர்நிலை 1- இல் குறிப்பிட்ட பாடங்களை அவர்களுடைய நிலைக்கும் மேற்பட்ட நிலையில் பயில வகை செய்கிறது. இது மாணவரது ஒட்டுமொத்தத் தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வு மதிப்பெண்ணின் அடிப்படையில் அமையாமல் ஒவ்வொரு பாடத்திற்குரிய அடைவுநிலை மதிப்பெண்களின் அடிப்படையில் அமைகிறது.*

| வழக்கநிலை(ஏட்டுக்கல்வி) அல்லது வழக்கநிலை(தொழில்நுட்பம்) பாடப்பிரிவிலுள்ள மாணவர்களுக்குரியது | |
|---|---|
| தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வு பொதுநிலை / அடிப்படைநிலை பாட மதிப்பீட்டுத் தரம் | பாடத்தைப் பயில்வதற்குரிய தெரிவு |
| பொதுநிலைப் பாடத்தில் 5 அல்லது அதற்கும் மேற்பட்ட அடைவுநிலையை அடைந்திருத்தல் | Express<br>விரைவு |
| பொதுநிலைப் பாடத்தில் 6 அல்லது அதற்கும் மேற்பட்ட அடைவுநிலையை அடைந்திருத்தல் அல்லது அடிப்படைநிலைப் பாடத்தில் அடைவுநிலை ஏ பெற்றிருத்தல் | N(A)<br>வழக்கம் (ஏட்டுக்கல்வி) |

* விரைவுப் பிரிவில் பயிலும் மாணவர்கள் தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வில் ஒவ்வொரு பாடத்திலும் எந்த அடைவுநிலையைப் பெற்றிருந்தாலும் பரவாயில்லை. அவர்கள், விரைவுநிலைக்குரிய அனைத்துப் பாடங்களையும் பயில்வர்.

உங்கள் பிள்ளை தாய்மொழிப் பாடத்தைப் பயில்வதிலிருந்து விலக்குப் பெற்றிருந்தாலோ உயர்நிலைப் பள்ளியில் உயர் தாய்மொழிப் பாடத்தைப் பயில எண்ணியிருந்தாலோ நீங்கள் பி. எஸ். எல். இ - எஃப். எஸ். பி இணையத்தளம் வாயிலாக மேலும் விவரம் அறியலாம் அல்லது பள்ளிகளை நாடலாம்.

# 2021-ஆம் ஆண்டு முதல் உயர்நிலை 1 நுழைவுச் சேர்க்கை

## 5 உயர்நிலை 1 நுழைவுச் சேர்க்கையையொட்டி என்ன எதிர்பார்க்கலாம்

**அக்டோபர் மாதத்திற்கு முன்பு**

**பள்ளிகளைப்பற்றிய தகவல்களை அறிதல்**

எங்கள் பி. எஸ். எல். இ - எஃப். எஸ். பி இணையத்தளத்தில் ஒரு பள்ளியைத் தேர்ந்தெடுக்கும்போது கருத்திற்கொள்ள வேண்டியவற்றைப்பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்.

https://go.gov.sg/choosing-sec-schools

**நவம்பர் மாத இறுதியில்**

**தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வு முடிவுகளைப் பெறுதலும் பள்ளித் தெரிவுகளைச் சமர்ப்பித்தலும்**

உங்கள் பிள்ளை விருப்பத்தின் அடிப்படையில் 6 வெவ்வேறு பள்ளிகளைத் தெரிவுசெய்து சமர்ப்பிக்கலாம்.

**டிசம்பர் மாத இறுதியில்**

**பள்ளி நுழைவுச் சேர்க்கையின் முடிவுகளைப் பெறுதல்**

நுழைவுச் சேர்க்கையின் முடிவுகள் கல்வி அமைச்சின் எஸ்1 – இணையத்தளத்திலும், குறுந்தகவல் மூலமாகவும் உங்கள் பிள்ளையின் தொடக்கப்பள்ளி வாயிலாகவும் வெளியிடப்படும்.

## 6 என் பிள்ளை எப்படி உயர்நிலைப்பள்ளியில் சேர்க்கப்படுவார்?

தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு அவர்கள் தேர்ந்தெடுத்த பள்ளிகளில் முன்னுரிமை வழங்கப்படும்.

ஒரு பள்ளியிலிருக்கும் கடைசி இடத்திற்குத் தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வில் ஒத்த மதிப்பெண் பெற்ற இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட மாணவர்கள் போட்டியிடும்போது, கடைசி இடம் யாருக்கு என்பதைத் தீர்மானிக்கப் பின்வரும் வரிசைமுறையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள கூறுகள் கருத்திற்கொள்ளப்படும்:

**2021 – ஆம் ஆண்டு முதல் புதிய கூறு**

1. குடியுரிமை
2. பள்ளிகளைத் தெரிவுசெய்த வரிசைமுறை
3. கணினிவழிக் குலுக்கல்முறை

ஒரு பள்ளியில் காலியிடங்கள் இல்லை என்றால், மாணவர்கள் தெரிவுசெய்த பள்ளிகளின் பட்டியலில் அடுத்ததாக உள்ள பள்ளியில் சேர்வதற்குப் பரிசீலிக்கப்படுவர். மாணவர்கள் விருப்பத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுத்த எந்தப் பள்ளியிலும் சேர இயலாத நிலை ஏற்படும்போது அவர்கள், பதிவு செய்யப்பட்ட அவர்களுடைய முகவரியின் அடிப்படையில் வீட்டுக்கு அருகில் இடமிருக்கக்கூடிய பள்ளிக்கு அனுப்பப்படுவார்கள்.

**சமநிலை முறியீட்டுக் கூறுகள் எப்படிப் பயன்படுத்தப்படுகின்றன என்பதைப்பற்றி மேலும் அறியவும்**

https://go.gov.sg/s1-posting-2021
(பள்ளித் தெரிவு சமர்ப்பிப்பையும் சமநிலை முறியீட்டுக் கூறுகளையும் பார்க்கவும்)

கூடுதல் விவரங்கள் அறியவும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கான விடைகளைக் காணவும் பி. எஸ். எல். இ - எஃப். எஸ். பி இணையத்தளத்தைப் பார்வையிடவும்.
https://go.gov.sg/pslefsbb